**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 12ம் நாள்
**இ.ம.எண். 3/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 43/2022**

மணிமொழி ..மனுதாரர்/ பிரதிவாதி

//எதிர்//

சசிகலா ..எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக இன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. அமிர்தராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று 28.08.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது கடந்த 06.07.2023 அன்று மனுதாரர் பேரில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை மாற்றியமைத்து வழக்கை மேல் நடத்த உத்தரவு பிறப்பிக்க கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம் :**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர் தன் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் கண்டுள்ள பெரும்பாலான விஷயங்கள் உண்மையல்ல என்றும், அதற்கு தான் விரிவான எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் சொல்லியுள்ள விபரங்களை இதன் ஒரு பாகமாக கருத வேண்டுவதாகவும், மேற்படி அசல் வழக்கில் தன் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 06.07.2023 அன்று போடப்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் தனக்கு

மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு தான் எழுந்து நடமாட முடியாமல் படுத்தபடுக்கையாக வீட்டிலேயே இருந்துவிட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக தனக்கு கடுமையாக விஷக்காய்ச்சல் ஏற்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வந்ததாகவும், அதன் காரணமாக தான் தனது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றிய விபரங்கள் கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், ஆகவே தான் மேற்படி 06.07.2023 தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என கண்டு தன் பேரில் எக்ஸ்பார்ட்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், தான் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் இல்லை என்றும், ஆகவே, தன் பேரில் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை மாற்றியமைத்து வழக்கை மேல் நடத்த வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டமும் ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படும் என்றும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர் உட்பட யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடியது இல்லை என்றும், எனவே, கடந்த 06.07.2023 அன்று மனுதாரர் பேரில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை மாற்றியமைத்து வழக்கை மேல் நடத்த உத்தரவு பிறப்பிக்க கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிருரையின் சுருக்கம்:</u>

3. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்ததக்கது அல்ல. மனுதாரர் அபிடவிட்டில் கூறியுள்ள காரணங்கள் சரியல்ல என்றும், மனுதாரர் அபிடவிட்டில் கூறியுள்ள காரணங்களை மனுதாரர் நிரூபிக்க கடமைபட்டுள்ளார் என்றும், மனுதாரர் வேண்டுமென்றே இந்த வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி தரப்பில் PW1, PW2, PW3 விசாரணை செய்யப்பட்டு PW4 விசாரணை செய்யும் காலத்தில் Exparte–யை ரத்து செய்ய கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

**தீர்வு**

5. மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அதற்கு மனுதாரர் விரிவான எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி அசல் வழக்கில் தன் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 06.07.2023 அன்று போடப்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் மனுதாரருக்கு மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு எழுந்து நடமாட முடியாமல் படுத்தபடுக்கையாக வீட்டிலேயே இருந்துவிட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக தனக்கு கடுமையாக விஷக்காய்ச்சல் ஏற்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வந்ததால் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றிய விபரங்கள் கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் இல்லை என்றும், எனவே, கடந்த 06.07.2023 அன்று மனுதாரர் பேரில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை மாற்றியமைத்து வழக்கை மேல் நடத்த உத்தரவு பிறப்பிக்க கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் வேண்டுமென்றே இந்த வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி தரப்பில் PW1, PW2, PW3 விசாரணை செய்யப்பட்டு PW4 விசாரணை செய்யும் காலத்தில் Exparte–யை ரத்து செய்ய கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் தரப்பில் அசல்வழக்கில் மனுதாரர் தங்களது தரப்பு எதிருரையை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தாகவும், அன்றைய தினம் மனுதாரர்களுக்கு உடல்நிலை சரியில்லாததால் எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கால தாமதமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கூறிய காரணம்

ஏற்றுக்கொள்ளகூடியதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர்கள் தனது தரப்பு வழக்கை எடுத்துகூறுவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இருதரப்பையும் கேட்டு வழக்கினை விசாரித்து தீர்வு காண்பதே முழுமையான தீர்வாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவை அனுமதிக்கலாம் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆனால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை கணக்கில் கொள்ளும்போது இந்த மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10. முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ. 1,000/- கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு 28.08.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.08.28 17:07:26 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.08.28 17:07:31 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**